தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!

குறிஞ்சி
முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

# நிகழினி இதழ்

## NIGAZHINI MAGAZINE

ஆசிரியர் : சந்திரா ஸ்ரீதர்

பதிப்பு :2023/3



**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
chandra.srithar01@gmail.com

இந்த இதழில் நிர்வகிக்கபட்ட படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்ல தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக்கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

## ஆசிரியர் பக்கம்

நிகழினி நிரந்தரம்!

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம், "**நிகழினி இதழ்**" தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயபடைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம். மகிழ்ச்சியாக வாசியுங்கள்!

தமிழோடு வாழ்வோம்!
உலகையே ஆள்வோம்!

இங்ஙனம்
திருமதி.சந்திரா ஸ்ரீதர்
ஆசிரியர்



# திருக்குறள் அறிவோம்



## தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
## முந்தி இருப்பச் செயல்

தகப்பன் தன் பிள்ளைக்குச் செய்யும் நன்மை, கற்றவர் அவையில் முதன்மை பெறச் செய்வதே.

The good a father can do to his child Is to make him excel in the midst of the learned.

தி ருக்குறள் எண் : 67
பா ல் : அறத்துப்பா ல்
அதி கா ரம் : மக்கட்பேறு
இயல்: இல்லறவியல்

**திருமதி . ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்.**

நம் பழம்பெரும் தமிழ்நாடு அரபிக்கடல், வங்கக் கடல், இந்தியப் பெருங்கடல் என்று மூன்று பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். அதனால் தமிழக மக்களுக்குக் கடலோ, கப்பலில் ஏறிக் கடல் பயணமோ, கடல் கடந்து வாணிகம் செய்வதோ புதிதல்ல. இது தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் ஒன்று தான்.

எழுத்து மொழிக்கு எழுத்திலக்கணமும், பேச்சு மொழிக்குச் சொல்லிலக்கணமும் கண்ட தொல்காப்பியர் அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கைக்குப் பொருள் இலக்கணம் வகுத்தார் . அவை அகப்பொருள், புறப் பொருள் என்பன. கைக்கிளை, பெருந்திணையோடு சேர்த்து அகப்பொருள் திணைகள் ஏழு என்று சொல்லப்பட்டாலும் அன்பின் ஐந்திணை என்று சொல்லப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணைகளே முக்கியமானவை-திணை என்றால் ஒழுக்கம் என்பது பொருள். ஒவ்வொரு திணைக்கும் முதல், உரி, கரு எனப் பொருள்கள் மூன்று உண்டு. அவற்றுள் முதற் பொருள் என்பது அவ்வத்திணைக்கு உரிய நிலமும் பொழுதும் ஆகும் .அவற்றின் நில அமைப்புக்கு ஏற்ற வகையிலேயே அத் திணைகளின் வைப்பு முறை அமைந்துள்ளது.

**ஐவகை நிலங்கள்:**

நிலப்பரப்பின் உயரமான பகுதி மலைப் பகுதியாகும். மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி எனப்பட்டது. மலையைக் காட்டிலும் தாழ்வான பகுதி காடு. எனவே காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலம் எனப்பட்டது. காட்டைக் காட்டிலும் தாழ்வான நிலப் பகுதியாகிய வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருத நிலம் எனப்பட்டது. வயல் பகுதியைக் காட்டிலும் தாழ்வான பகுதி கடல் பகுதி. கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் எனப்பட்டது. மலையில் உற்பத்தியாகும் ஆறானது காடு, வயல் வெளிகளைக் கடந்து கடலில் சென்று கலக்கிறது.

இந்த நான்கு நிலப்பகுதிகளைத் தவிர்த்துப் பாலைத் திணைக்குரிய நிலமாகக் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் தமிழ் நாட்டில் எந்த நிலப்பகுதியும் இல்லை. ஆனால் கோடையின் வெப்பத்தில் மலைகள் பொடிந்தும், காடுகள் கரிந்தும் தம்முடைய இயல்பிலிருந்து திரிந்து இருக்கும்போது அது பாலை நிலம் ஆகிறது. இதைத் தான் சிலப்பதிகாரம்,

**"குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொண்டது "**
**( சிலப்பதிகாரம் –--- காடு காண் காதை)**

என்று குறிப்பிடுகிறது.

ஐவகை நிலங்களுள் நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். எனவே தமிழக மக்களுக்குக் கடலும் கடல் பயணமும் அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதி என உணரலாம்.

அகத்திணை ஐந்திற்கும் தனித்தனியாக ஒழுக்கங்கள் உண்டு. அவற்றுள் பாலைத் திணைக்குரிய ஒழுக்கம் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். அதாவது சில சமயங்களில் தலைவன் தலைவியைப் பிரிந்திருக்க வேண்டியிருக்கும். பிரிவுக்கான காரணங்களாகச் சொல்லப் படுபவை கல்வி, போர், பொருள் ஈட்டல் முதலியன. மிகப் பழங்காலத்திலேயே பண்டைத் தமிழர் உலக முழுமையிலும் வணிகத் தொடர்பும் பிற தொடர்புகளும் கொண்டிருந்தனர் என்பதைக் கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் பாடல் வரியும், ஔவையாரின் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற வரியும் உணர்த்துகின்றன. இவையெல்லாம் கடல் கடந்து வாணிகம் செய்வதைத் தான் பெரிதும் குறித்தன.

**கடல் வாணிகம் பற்றித் தமிழ் இலக்கியங்கள்:**

கரிகால் சோழனின் மூதாதையருள் ஒருவன் கடற் காற்றின் உதவியால் கடலில் நாவாய் ஓட்டினான் என்பதைப் புலவர் வெண்ணிக்குயத்தியார் கரிகாலனைப் பாடிய,

**“ நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக**
**களியியல் யானைக் கரிகால் வளவ "**
**-( புறம் 66 )**

என்ற பாடலால் அறிகிறோம். இப்பாடல் எழுதப்பட்டது கி. மு. மூன்றாம் நூற்றாண்டு. எனவே அதற்கு முன்பே தமிழர்கள் கப்பல் செலுத்துவதில் திறமை உடையவர்களாக இருந்தனர் என்பதற்கு இப்பாடல் ஒரு சான்று.

**நாவாய்** என்பது கடல் வாணிகம் செய்யப் பயன் படுத்தப்பட்ட மரக்கலம். இம்மரக்கலத்தின் அடிப்பகுதி வாயில் இருக்கும் நாக்குப் போன்ற அமைப்பினைக் கொண்டிருப்பதால் இதனை நாவாய் என்ற அழைத்தனர். நாவாய் என்பதே மருவி 'நேவி' ( navy ) என்று ஆகி இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. அந்நாளில் **வங்கம்** என்றும் ஒரு மரக்கலம் இருந்திருக்கிறது. இதை

**"மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்**
**சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்**
**ஊனுயிர் மடிந்தது உரவோய் என்றலும்"**
**( மணிமேகலை )**

என்ற மணிமேகலை வரிகளால் அறிகிறோம்.

**கரையோர வாணிகம்:**

தொடக்க காலத்தில் கடல் வாணிகம் என்பது கடற்கரை ஓரமாகவே கப்பலில் சென்று கரையோரத்தில் இருக்கும் ஊர்களில் தமிழர் வாணிகம் செய்து இருக்கின்றனர். தமிழர் கடல் கடந்து செல்லும்போது மகளிரை அழைத்துச் செல்லும் பழக்கம் இல்லை யென்பதை,

**"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை"**
(தொல். பொருளதிகாரம் , அகத்திணை யியல் )

என்ற நூற்பா சுட்டுகின்றது.

பெரிய அளவில் வாணிகம் செய்தவர் பெருங்குடி வணிகர் எனப்பட்டனர். அயல் நாடுகளுக்கு வாணிகம் செய்யச் சென்றவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாகச் சென்றனர். அந்தக் கூட்டத்துக்கு வணிகச் சாத்து என்பது பெயர். அவர்கள் தங்களை வழிப்பறிக் கொள்ளையரிடம் இருந்து காத்துக் கொள்வதற்காகத் தங்களோடு வில் வீர்ர்களையும் அழைத்துச் சென்றனர். வணிகச் சாத்துகளுக்குத் தலைவனான வணிகனுக்கு **மாசாத்துவன்** என்று பெயர். சிலப்பதிகாரக் கோவலனின் தந்தை ஒரு மாசாத்துவன் என்று சிலப்பதிகாரம் சொல்கிறது.

"வருநிதி பிறர்க்காற்றும் மாசாத்துவான் என்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண்டு அகவையான்"
( சிலம்பு — மங்கல வாழ்த்துக் காதை )

நாவாயில் கடல் வாணிகம் செய்த பெரிய வணிகர் ( நாவிகர் ) மாநாவிகர் எனப்பட்டனர்.

அதுவே மருவி**மாநாய்கர்** என்றாயிற்று. சிலப்பதிகாரக் கண்ணகி ஒரு மாநாய்கன் மகள்.

"**மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்**
**ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண்டு அகவையாள்**"
( **சிலம்பு —-- மங்கல வாழ்த்துக் காதை** )

சாதுவன் என்ற வணிகன் ( ஆதிரையின் கணவன் ) வாணிகம் செய்யும் பொருட்டு மற்ற வணிகர்களுடன் சேர்ந்து கடலில் பயணம் செய்தபோது மரக்கலம் புயலில் சிக்கி உடைந்தது. அதில் பயணம் செய்த பலர் இறந்து விட்டதாகவும், சாதுவன் மட்டும் நாகமலைக்குச் சென்று ஒதுங்கினான் என்றும் மணிமேகலை காப்பியம் கூறுகிறது.

**நடுக்கடல் வாணிகம்:**

பசிபிக் மகா சமுத்திரத்தில் இருக்கும் பெருந் தீவுகளின் கூட்டம் கிழக்கிந்தியத் தீவுகள் அல்லது இந்தோனேசியத் தீவுகள் என்று அழைக்கப்படும். சங்க காலத்தில் இவை சாவகம் என்று தமிழரால் அழைக்கப் பட்டன.
சாவக நாடு என்பது ஆயிரக்கணக்கான தீவுகளின் கூட்டம். அவற்றுள் முக்கியமானவை சாவா, சுமத்ரா என்பவை. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருந்த சாவக நாடு அக்காலத்தில் புகழ்பெற்ற வாணிகத் தலமாக இருந்தது. சீன நாட்டிலிருந்து பட்டுத் துணிகளும், பீங்கான் பாத்திரங்களும் சாவகத்துக்கு வந்தன. சாவகத்து மிளகு தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை நாடுகளுக்குக் கொண்டு வரப்பட்டது. சாவகத்து மிளகைக் காட்டிலும் தரத்தில் சிறந்த சேர நாட்டு மிளகு யவனர்களால் உரோமாபுரி போன்ற மேலை நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

சுமத்ராவிலிருந்து சந்தனக் கட்டைகள், சாதிக்காய் இலவங்கம், கற்பூரம் முதலியனவும் தமிழக வணிகர் களால் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன. கற்பூரத்தில் பளிதம் என்பது ஒரு வகை. பச்சைக் கற்பூரம் என்றும் அதைக் கூறுவர். அதை அக்காலத் தமிழர் வெற்றிலையோடு சேர்த்துச் சாப்பிட்டனர் என்பதை மணிமேகலை கூறுகிறது .

**"போனகம் எய்திப் பொழுதினிற் கொண்டபின்**
**பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து"**
**( மணிமேகலை )**

போனகம் என்பது விருந்து உணவு.

"போனகம் என்பது தான் உழந்து உண்டல் ( கொன்றை வேந்தன் ) பாண்டிய நாட்டிலிருந்து சாவகம் தீவுக்குக் கப்பலில் சென்று வாணிகம் செய்தனர் என்பதை மணிமேகலை,

**"மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்**
**சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்**
**ஊனுயிர் மடிந்தது உரவோய் என்றலும்"**

**( மணிமேகலை – பாத்திர மரபு கூறியகாதை)**

என்று கூறுகிறது.

தொண்டி, முசிறி, கொற்கை, காவிரிப்பூம் பட்டினம் (அ) புகார்த் துறைமுகத்தின் பண்டக சாலைக்குக் கடல் வழியாக வந்திறங்கிய பொருட்கள் குறித்துப் பட்டினப்பாலை தெளிவாக விவரிக்கிறது.

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு "**

**( பட்டினப்பாலை )**

நீரின் வழியாக வந்த உயர்வகைக் குதிரைகளும், நிலத்தின் வழியாக வந்திறங்கிய மிளகும் ( கருங்கறி ),வடக்கு மலைப் பிரதேசங்களில் இருந்து தருவிக்கப்பட்ட அரிய வைரக் கற்கள் மற்றும் பொன் ஆரங்களும், மேற்கு மலைப் பொருள்களான சந்தனம் முதலான வாசனைப் பொருள்களும், தென்கடல் முத்தும், கிழக்குக் கடல் பகுதியிலிருந்து பவளமும், கங்கை மற்றும் காவிரியின் வளத்தால் பெறப்பட்ட பொருள்களும், ஈழத்திலிருந்து உணவு வகைகளும், காழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், பிற இடங்களில் இருந்து வந்து இறங்கிய அரிய பெரிய பொருட்கள் பற்றியும் இப்பாடல் வரிகள் விளக்குகின்றன.

"**கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்**
**காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்**"

என்ற பாரதியாரின் வரிகளும் இங்கு நினைவு கூரத் தக்கன.

தமிழகத்துப் பருத்தி, பட்டுத் துணிகள் தரத்தில் மேம்பட்டவையாக இருந்ததனால், அவற்றுக்கு மேலை நாடுகளில் பெரும் வரவேற்பு இருந்தது. தமிழகத்தில் இருந்து சென்ற ஒவ்வொரு கப்பலிலும் ஏலக்காய், இல வங்கம், வெல்லப் பாகு, நல்லெண்ணெய், மிளகு, தேங்காய், நெய், அரிசி, சோளம் கம்பு, வெற்றிலை, பாக்கு போன்ற பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

கொங்கு நாட்டுத் தங்கம், பாண்டி நாட்டு முத்து, சேர்ந்தார் நாட்டுத் தந்தம், சந்தனம், மிளகு, வாசனைப் பொருள்கள், இஞ்சி, ஏலம், கிராம்பு போன்றவை தமிழகத்துத் துறைமுகங்களில் பண்டமாற்று முறையில் வாணிகம் செய்யப்பட்டன. அது மட்டுமல்லாமல் பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டும் பொருள்களை விற்றதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**"சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"**

என்ற அகநானூற்று வரிகளில் யவனருடைய மரக்கலங்கள் முசிறித் துறைமுகத்துக்கு வந்து கறியை (மிளகை) ஏற்றிக் கொண்டு, பொன் வெள்ளிக் காசுகளைக் கொடுத்துவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மகாபலிபுரம் ஒரு கடல் துறைமுகமாக இருந்துள்ளது என்றும், பாண்டிச்சேரியில் உள்ள அரிக்கமேடு மத்திய தரைக்கடலில் பெரிய வர்த்தக மையமாக விளங்கியது என்றும் அகழ்வாய்வுகள் கூறுகின்றன.

**கடல்சார் வாணிபமும் தமிழ்ப் பண்பாடும் :**

கடல்சார் வாணிபத்தின் மூலம் நாடுகளுக்கு இடையே இருந்த உறவுகள் உறுதிப்படுத்தப் பட்டன.

கடலோடிப் பிழைத்தவர்கள் தமக்கு வேண்டிய செல்வத்தைத் தேடிக் கொண்டதோடு நம் தமிழ் நாட்டுப் பண்பாடு, கலை, கலாச்சாரம், பாரம்பரியம், மொழி ஆகிய அனைத்தையும் பல்வேறு நாடுகளில் பரவச் செய்து வந்துள்ளனர்.

மேற்கே கிரீசு, ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையும், பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் பழந்தமிழர் வாணிகத் தொடர்பு வைத்திருந்தனர். கிழக்கையும் மேற்கையும் இணைத்ததில் கடல்வழி வாணிபத்திற்குப் பெரும் பங்குண்டு. பழந்தமிழர் போர் செய்யவும், பொருள் தேட வும், வாணிகம் செய்யவும் கடல் கடந்து சென்றதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இவ்வாறு நாடு விட்டு நாடு சென்று வாழ்வதைப் 'புலம் பெயர்தல்' என்பர். தமிழர் பல்வேறு காரணங்களுக்காகப் பிற நாடுகளுக்குச் சென்றாலும் அவர்கள் அங்கேயே தங்கிவிட்டதாகச் செய்திகள் இல்லை. ஆனால் பிற நாட்டு மக்கள் தமிழகத்தில் வந்து வாழ்ந்ததாக அறிகிறோம்.

**"மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்"**

என்று பட்டினப்பாலையும்,

**“பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்தினிது உறையும் இலங்குநீர் வரைப்பும்.”**

என்று சிலப்பதிகாரமும் குறிக்கின்றன.

புலம்பெயர்தல் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் மொழி பெயர் தேயம் என்று சுட்டுகின்றன. மொழி பெயர் தேயம் என்றால் வேறு மொழி வழங்கும் நாடு என்பது பொருள்.

**மொழிபெயர் தேயத்தோர் ஒழியா விளக்கம்** என்ற சிலப்பதிகாரத் தொடரால் இதை அறியலாம்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற முதுமொழி அன்றைய காலகட்டத்தில் கடல் கடந்து சென்று வாணிபம் செய்வதையே பெரிதும் குறித்தது.

ஆனால் இன்று வாணிகத்திற்கு மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிலும் பணிபரிவதற்காகவும் தமிழக மக்கள் கடல் கடந்து செல்வது மட்டும் அல்லாமல் அந்தந்த நாடுகளி லேயே குடியுரிமை பெற்று வாழவும் செய்கிறார்கள். அவ்வாறு சென்று குடியேறிய தமிழர்கள் தங்கள் வேர்களை மறக்காமல், தமிழ்க் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் போற்றிப் பாதுகாக்கப் பெரு முயற்சி செய்கிறார்கள்.

தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கவும், தமிழில்பேசிப் பழகவும், தாங்கள் வாழும் பகுதிகளில் தமிழ்ப் பள்ளிகளும், தமிழ்ச் சங்கங்களும் அமைத்து அவற்றின் மூலம் பேச்சுப் போட்டி, தமிழிசை, நாட்டிய அரங்கேற்றம், பட்டிமன்றம் போன்றசெயல்முறைகளால் ஆவன செய்கிறார்கள். ஏனெனில் நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், நாம் எங்கிருந்து வந்தோம் என்பது முக்கியம் அல்லவா!

## திருமதி. தேவி பிரியா

வள்ளுவரின் வாசுகி, பாரதியின் கண்ணம்மா, காந்தி அடிகளின் கஸ்தூரிபாய் என வெற்றி பெற்ற ஆண்களின் பின்னால் இருந்த சிறந்த பெண்மணிகளின் பலருடைய வரலாற்றை நாம் அறிந்து இருக்கின்றோம். அந்த வரிசையில், ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்கு முதுகெலும்பாய் இருப்பதும் ஆண்களே என்பதை எடுத்துரைக்கும் திருமதி. இந்திரா நூயின் வாழ்க்கைப் பதிவைச் சுருக்கமாக உங்களுக்காக இந்த கட்டுரையில் எழுதியுள்ளேன்.

இந்தியாவின் தென் மாநிலமான தாய்த் தமிழகத்தில், சென்னை மாநகரத்தில், ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, தான் பெற்ற கல்வியினால் ஒரு மிகப்பெரிய நிறுவனத்தின் உலகத் தலைமைப் பொறுப்பில் இருந்த திருமதி. இந்திரா நூயி, தான் பெற்ற வெற்றிகளின் பின் இருந்த ஆண்களின் பங்களிப்பைத் தன் வாழ்க்கை வரலாற்றில் அருமையாகப் பதிவு செய்துள்ளார். ஆணுக்குப் பெண் சமம் என்பதை உணர்ந்த இளம் தலைமுறைக்கு உத்வேகம் தரும் வகையில் அமைந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

பள்ளிப் பருவத்தில் அவருடைய தாத்தா மற்றும் தந்தையின் ஊக்கமும், இளங்கலை முதுகலைப் பட்டங்கள் படிக்கும் போது அங்கிருந்த பேராசிரியர்களின் உந்துதலும் தன் வாழ்க்கைப் பாதையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற தெளிவையும் தைரியத்தையும் கொடுத்ததாகவும், தான் தொட்ட சிகரத்திற்கு அவை அடித்தளமாய் அமைந்ததாகவும் விவரித்துள்ளார். அமெரிக்காவின் Yale Universityல் MBA படிக்க இடம் கிடைத்த போது தான் பணியாற்றிய நிறுவனங்களின் முதன்மைப் பொறுப்பில் இருந்த Mr. Norman மற்றும் ST Rao அவர்கள் பெருமிதத்துடன் ஊக்குவித்ததையும், தான் அமெரிக்கா செல்ல விசா எடுக்க தூதரகத்தின் முன் வரிசையில் நிற்கையில் காபி மற்றும் காலைச் சிற்றுண்டி வாங்கிக் கொடுத்து தன் வெற்றி பயணத்திற்கு உறுதுணையாக இருந்தவர்களை நன்றியுடன் பறைசாற்றியிருக்கின்றார்.

“I am not this Indra without my Raj!” என்று தன் கணவர் தன் வாழ்க்கையின் தூண் என்று புகழாரம் சூட்டியுள்ளார். தன் மகப்பேறு காலத்திலும், பணி நிமித்தமாக வேறு இடம் புலம் பெற வேண்டும் என்ற சூழ்நிலையிலும்,

வேலைப் பளுவால் தன் இரண்டு பெண் குழந்தைகளுக்கும் அவருக்கும் இருந்த இடைவெளியை ஒரு கணவராக, அப்பாவாக நிரப்பிய கணவருக்கு தன் வெற்றியை சமர்ப்பித்திருக்கிறார்.

பெப்சிகோவில் மிஸ்டர் ரோஜர், பெப்சிகோவின் முன்னாள் சிஇஓ தன் வளர்ச்சிக்கு வித்திட்டார் என்றும் தான் பெற்ற ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னரும் ஒரு ஆணின் உதவியும், ஊக்கமும், தியாகமும் இருந்ததை உறுதி செய்திருக்கிறார். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானது, அதற்கு மேலும் பல பெண் தலைவர்கள் அனைத்துத் துறைகளிலும் உருவாக மூன்று முக்கியமான அம்சங்களை தன் வாழ்க்கை வரலாற்றில் முன் வைத்திருக்கிறார்.

1. மகப்பேறு காலங்களில் குறைந்தது மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை சம்பளத்துடன் விடுமுறை.
2. ‘கேர்’ – குழந்தை மற்றும் பெற்றோர்களுக்குக் கொடுக்க பட வேண்டிய பராமரிப்புச் சேவையைப் பெண்களைப் பணி அமர்த்தும் நிறுவனங்களும் அரசும் ஏற்படுத்தித் தர வேண்டும்.
3. flexibility - இந்த டெக்னாலஜி காலத்தில் வேலை செய்யும் நேரத்தையும் இடத்தையும் பெண்களின் வசதிக்கேற்ப அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தன் தொலைநோக்குப் பார்வையைப் பதிவிட்டிருக்கிறார் இந்திரா.

இது ஒவ்வொரு பெண்ணும், பெண்களை உருவாக்கும் பொறுப்பில் இருக்கும் ஒவ்வொரு ஆண்களும் படிக்க வேண்டிய பதிவு.

## கவிஞர் கண்ணதாசனின் சிந்தனைகள்

**அழும் பொழுது தனியாக அழு.**

**சிரிக்கும் பொழுது நண்பர்களுடன் சிரி.**

**கூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பார்கள்.**

**தனியாக சிரித்தால் பைத்தியம் என்பார்கள்.**

**- கண்ணதாசன்.**



# சுட்ட கதை - கழுதையும் புலியும்

திருமதி. சரண்யா திருநாவுக்கரசு

ஒரு நாள் கழுதையும் புலியும் காட்டில் நடந்து சென்று கொண்டிருந்தன. தங்களது காலிற்குக் கீழே உள்ள புல் என்ன நிறம் என்று பேசத் தொடங்கியது.

கழுதை புலியிடம் கூறியது: புல் நீலம்.
பதில் சொன்ன புலி: இல்லை, புல் பச்சை.

அந்த விவாதம் சூடுபிடித்தது. அந்த விவாதத்தை விவாதத்திற்குச் சமர்ப்பிக்கஇருவரும் முடிவு செய்தனர். அதற்காக அவர்கள் காட்டு ராஜாவான சிங்கத்தை அணுகினர்.

சிங்கம் தன் அரியணையில் அமர்ந்திருந்த இடத்தைச் சென்றடையும் முன்பே கழுதை அலறத் தொடங்கியது: “சிங்க ராஜா, புல்லின் நிறம் உண்மையில் நீலம் தானே!!!” சிங்கம் மிக அமைதியாகப் பதில் கூறியது: "உண்மை, புல் நீலம் தான்".கழுதை வேகமாக முன்னால் சென்று தொடர்ந்தது: சிங்கராஜா, புலி என்னுடன் முரண்படுகிறது. அது எனக்கு மிகவும் எரிச்சலூட்டுகிறது. தயவு செய்து அவரைத் தண்டிக்க வேண்டும். பின்னர் சிங்கராஜா அறிவித்தார்: புலிக்கு 5 ஆண்டு மௌன தண்டனை.

கழுதை சந்தோஷத்துடன் குதித்துத் தன் வழியில் சென்றது, வழி நெடுக "புல்லு நீலம், புல்லின் நிறம் நீலம் ...".புலி தனது தண்டனையை ஏற்றுக் கொண்டது, ஆனால் அது சிங்கத்திடம் கேட்டது: சிங்கராஜவே , என்னை ஏன் தண்டித்தீர்கள், புல் பச்சை தானே! அதுதான் உண்மையும் கூட!!
சிங்கம் பதில் கூறியது: “உண்மையில், புல் பச்சை நிறம் தான்”
பின்னர் புலி கேட்டது: “அப்படியென்றால் என்னை ஏன் தண்டிக்க வேண்டும்”
சிங்கம் பதில் சொன்னது:

புல் நீலமா, பச்சையா என்ற கேள்விக்கும் உன் தண்டனைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. உன்னைப் போன்ற புத்திசாலியான ஒரு உயிரினம், கழுதையுடன் வாக்குவாதம் செய்து உன் நேரத்தை நேரத்தை வீணடித்தாலும், மேலும் இந்த விவாதத்தை என்னிடம் எடுத்து வந்து என் நேரத்தை வீணடித்ததாலும் தான் இந்த தண்டனை.

உண்மையையோ, யதார்த்தத்தையோ பொருட்படுத்தாத மூடன், வெறியனுடன் வாதாடுவதுதான் மிக மோசமான வீணான நேரம். அர்த்தமற்ற விவாதங்களில் நேரத்தை வீணடிக்காதீர்கள்... அவர்களிடம் முன்வைக்கப்படும் அனைத்து ஆதாரங்களையும், புரிந்து கொள்ளும் திறன் இல்லாதவர்கள், ஈகோ, வெறுப்பு, மனக்கசப்பு போன்றவற்றால் கண்மூடித்தனமாக இருப்பவர்கள், அவர்கள் விரும்புவதும் கூறுவதும் சரியில்லை என்றாலும் சரிதான் என்றும், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பார்கள்!

அறியாமை கூக்குரல் எழுப்பி அலறினால், புத்திசாலித்தனமும் நுண்ணறிவும் வாயடைக்கப்படுகிறது. உங்கள் நிம்மதியும்,அமைதியும், நேரமும் அதிக மதிப்புடையது. யாருக்காகவும் அதை வீணடிக்காதீர்கள்!

## ஒரு பக்க சிந்தனை கதை

செல்வி . யாழிசை சந்திரா ஸ்ரீதர்

ஒரு அடர்ந்த காடு. யோகவிஷா அந்தக் காட்டினில் தன்னந்தனியாக மாட்டிக்கொள்கிறாள் . அங்கு பச்சைப் பசேலென நெடுமரங்கள், வழியெங்கிலும் விலங்குகளின் அதிபயங்கர சத்தம் எல்லோரையும் அலறவைக்கும் அளவிற்கு இருந்தது. இருப்பினும் தைரியத்தை வரவழைத்து வீட்டைத் தேடிப் பயணிக்கிறாள். மரக்கிளையில் குருவிகள் கூட்டம் கூட்டமாகப் பறந்தோடியது.அதை ரசித்துப் பார்த்தபடி நடக்கிறாள் . பாதையெங்கும் குவியல் குவியலாகக் கற்கள் கொட்டிக்கிடந்தது, சாரை சாரையாய் எறுப்புகள் ஊர்ந்தன. இருப்பினும் அதில் தன் கால் படாதவாறு பாதுகாப்பாக நடந்தாள் யோகவிஷா. தூரத்தில் ஒரு நாய் ஓடிவர இவளும் ஓடிக் கொஞ்சத் தொடங்குகிறாள் . ஏனெனில் அது அவளின் செல்ல நாய் டிங்கி. ஆமாம் ஒருவழியாக அவள் வீட்டை அடைந்துவிட்டாள். அவளுக்குப் பிடித்த மாம்பழத்தை ஆசையாகவும் அவசரத்துடனும் சாப்பிடுகிறாள் .
அவளின் பெற்றோர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

இந்தக் கதையில் வரும் அடுக்குத் தொடர்களை கண்டுபிடித்து எழுதுக?
ஒரு தொடரில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வருவது, அடுக்குத் தொடர் ஆகும்.

உதாரணம் 1 . கூட்டம் கூட்டமாக …

1. குவியல் குவியலாகக் கொட்டிக்கிடந்தது என்ன?


2. யோகவிஷாவின் செல்ல நாயின் பெயர் என்ன?

3. நெடுமரங்கள் என்ன வண்ணத்தில் இருந்தன?

4. யோகவிஷாவிற்குப் பிடித்த பழம் என்ன?

# தமிழ் வார்த்தை விளையாட்டு

| தமிழ் வார்த்தை விளையாட்டு | விடை |
|---|---|
| 1. டி கா ர க ம் | |
| 2. ண் டை ச | |
| 3. க் க டை சா | |
| 4. ல் வா ன வி | |
| 5. தை வா ர் த் | |



எழுத்தாளர் திருமதி. அனு அசோக்



## ஜெயம் - 2

கலக்டர்ஆபீசில் நடந்தேறிய குளறுபடிகளை தொடர்ந்து இந்துமதி தனது அலுவலகம் வந்துசேர காலை பத்துமணிக்கு மேல்ஆகிவிட்டது. அவளது வாகனம் அலுவலக வாசலை அடைந்த நேரம் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர்வேகவேகமாக ஓடிவந்தார்.

“என்னவிஷயம் துரைராஜ்...?ஏன் இப்படி ஓடிவறீங்க...!”
“கே.ஜி முத்தையா காலேஜ்ஸ்டூடண்ட்ஸ்குள்ள பிரச்சனையாம் மேடம்...”
“யாருஇன்போர்ம் பண்ணது...”
“காலேஜ் பஸ் ஸ்டாப்புக்குபக்கத்துல இருக்கிற பெட்டிக்கடையில இருந்து யாரோ போன் பண்ணிருக்காங்க... இப்போ தான் கண்ட்ரோல் ரூம்லஇருந்து மெசேஜ் வந்தது”
“ டெல்மீ ஆல் தீ டீடைல்ஸ்...?”
“கே.ஜி முத்தையாஇன்ஸ்டியூஷன்ல படிக்கிற ஆர்ட்ஸ் ஸ்டூடண்ட்ஸ்க்கும், இன்ஜினியரிங் ஸ்டூடண்ட்ஸ்க்கு ஏதோ பிரச்சனை மேடம்... வேற எந்த டீடைல்ஸும் சரியாதெரியல”
“ ரெண்டுகாலேஜூம் ஒரே கேம்பஸா...”
“ எஸ்மேடம்...!”
“சரி, நான் முன்னால போறேன்... எதுக்கும் நீங்க ஆர்மிட்டு போர்ஸோட(Armed force) ஸ்பாட்டுக்கு வந்திடுங்க... சுப்பையா சீக்கிரம் வண்டியை எடுங்க...”அவள் கட்டளைக்குஅடிபணிந்து டயர்களைதேய்த்துக்கொண்டு விருட்டென்று கிளம்பியது ஜீப்.

இந்து சம்பவ இடத்தைஅடைந்திருந்த போது நிலைமை கட்டுக்கடங்காமல்போயிருந்தது. பல மாணவர்கள் உடலில்ரத்தக்காயங்களுடன் உடைகள் கிழிந்த நிலையில் சகமாணவர்களுடன் சண்டையிட்டு வண்ணம் காணப்பட்டனர். கும்பலுக்குள் தெரிந்த ஒன்றிரண்டு செக்கூரிட்டி யூனிபோர்ம்ஸ்... அவர்களை கட்டுக்குள்கொண்டு வருவதற்கு போராடிக்கொண்டிருந்தது. கல்லூரிநிர்வாகம் செய்வதறியாது ஸ்தம்பித்துப் போயிருக்க... ஜீப்பை விட்டு இறங்கிய இந்துவைபார்த்துவிட்டு பொறியியல் கல்லூரி பிரின்சிபால் விரைந்து வந்தார்.

“என்னசார் பிரச்சனை?” என்றவளிடம்...
“ரெண்டுகாலேஜ் பசங்களுக்கும் எப்பாவது இப்படி சின்னசின்ன பிரச்சனை வரும் மேடம்... வேற எதுவும் பெருசாநடந்தது இல்லை இதுவரைக்கும்...”
“ஏன்...? எதாவது பெருசா நடந்தா தான் கவனிப்பீங்களா... சரி, உடனே எங்களுக்கு இன்போர்ம்பண்ண வேண்டியது தானே...”
“இன்னைக்குசெமஸ்டர் மேடம்...! உள்ள பாதிபேர் எக்ஸாம் எழுதிட்டு இருக்காங்க... அதான் நாங்களே சால்வ் பண்ணிடலாம்னு நினைச்சோம்... ஆனா, நிலைமை கைமீறிபோயிடுச்சு. ” என்றார் கைகளை பிசைந்து கொண்டே...
மீண்டும்ஜீப்பை நெருங்கி ஒரே தாவலில் பானட்டின்மேல் ஏறி நின்றவள்... மெகாஃபோனைகையில் எடுத்து...
“ஸ்டூடண்ட்ஸ்உங்களுக்குள்ள என்ன பிரச்சனையிருந்தாலும் வன்முறையை கையிலஎடுத்துட்டு இப்படி ஒருத்தரை ஒருத்தர் அடிச்சிக்கிறது சட்டத்திற்கு புறம்பான செயல்... என்ன பிரச்சனைன்னாலும் என்கிட்டசொல்லுங்க... கல்லூரி நிர்வாகத்துக்கிட்ட பேசி அதை சரிபண்ண வேண்டியது என்னோடபொறுப்பு... இப்போ, தயவு செய்து எல்லாம்அவங்க காலேஜிக்கு போங்க...” இந்துமதி கூட்டத்தைபார்த்து சொல்ல... ஒன்றிரண்டு பேர் சண்டையை நிறுத்திவிட்டு அவளை கவனிக்க ஆரம்பித்தனர்.

சிலநொடிகள் அமைதிக்கு பின் “நீங்க இப்போ களைந்து போகலைன்னா இந்த காலேஜ்ல மட்டும் இல்ல வேற எந்தகாலேஜிலும் நீங்கபடிப்பை தொடர முடியாது...”தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்களை பார்த்து அவள் அழுத்தமாக முழங்க... அந்நேரம், இரண்டு போலீஸ் வேன்களில் ஆயுதப்படையும் வந்து சேர்ந்தது.

“நாங்கஏன் கலைந்து போகணும்...? ஆர்ட்ஸ் காலேஜ் பசங்கன்னா... இன்ஜினியரிங் படிக்கிற பசங்களுக்கு எப்பவும் எளக்காரமா இருக்கு... ஹாஸ்டல்ல அவங்க சாப்பிட்ட பிறகு தான் நாங்க சாப்பிடனும், அவங்க குளித்த பிறகு தான் நாங்க குளிக்கனும்னு சட்டம்போடுறானுங்க... மானேஜ்மெண்ட்கிட்ட சொல்லி ரெண்டு கேம்பஸயும் தனித்தனியா பிரிக்க சொல்லுங்க ” கலைக்கல்லூரி மாணவன் ஒருவன் முன்னால் வந்து கூற...
“நாங்கதான் இந்த கேம்பஸ்ல முன்னாடிலஇருந்து படிக்கிறோம்... நீங்க புதுசா வந்தவங்கன்னு ஆர்ட்ஸ் பசங்க தான் எங்ககிட்டபிரச்சனை பண்றது... இன்னைக்கு செமஸ்டர்னு கூட பார்க்காம எங்கஸ்டுடென்ட் ஒருத்தனை கல்லால அடிச்சி மண்டையை உடைச்சிட்டானுங்க...” பொறியியல் மாணவன் கொதிப்புடன் அதை மறுத்தான்.

“இல்லைஇவன் பொய் சொல்றான்... எங்க பசங்க அப்படி யாரையும் அடிக்க மாட்டாங்க...” மற்றவன் அதை மறுத்ததும், மீண்டும்மாணவர்களுக்குள் சர்ச்சையும், சஞ்சரவும் கிளம்பியது.

அவர்களைபேசவிட்டு அமைதியாக மாணவர்களின் தலைகளை வட்டமிட்டிருந்த இந்துவின் கோல்டன் ஈகிள் கண்கள் ஓரிடத்தில் குத்திட்டு நின்றன. சிறிது நேரத்தில் சப்- இன்ஸ்பெக்டர் துரைராஜை அழைத்து கூட்டத்தை சுட்டிக்காட்டி ஏதோ சொன்னாள் அவள்...

அவர்தலையசைத்து விட்டு மாணவர்களின் கூட்டத்திற்குள் நுழைந்தார்... அவர் நுழைந்த வேகத்தில்கூட்டத்தின் மையத்தில் நின்றிருந்த ஒருவன் ஓட்டம் பிடிக்க... காவல் துறையினர் அவனை சுற்றி வளைத்துபிடித்து விட்டனர்.

ஆயுதப்படையினரின்உதவியில் அடுத்த அரைமணி நேரத்தில் கல்லூரி வளாகம் அமைதி பூங்காவாக காட்டி அளிக்க, மாணவர்கள் அவரவர் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். செமஸ்டர் பரீட்சை எழுதுவதற்கு உதவியாக... காயம் பட்ட சிலருக்குமுதலுதவி சிகிச்சையும் அளிக்கப்பட்டது.
“உன்பேர் என்ன?” கல்லூரி முதல்வர் அறையில் தலைக்காயத்துடன் நின்றிருந்த அந்தமாணவனிடம் விசாரித்துக் கொண்டிருந்தாள் இந்து...
“பிரசன்னா...” கவிழ்ந்திருந்த தலையை நிமிர்த்தாமலே மெல்லிய குரலில் சொன்னான் அவன்...

“சரி, சொல்லு...! உன்னால தானே இந்த பிரச்சனைஆரம்பித்தது...” பதில் இல்லை அவனிடத்தில்...
“இப்போநீ பதில் சொல்றியா...? இல்லை உன்னை கல்லால அடிச்சவன்னு சொன்னியே அவனையும் கூப்பிட்டு விசாரிக்கட்டுமா?” இந்துவின் அழுத்தம் திருத்தமான உறுமலில்...

பயத்தால்வெளிறிய முகத்துடன் மெல்ல நிமிர்ந்தவன், ப்ரின்சிபாலை பீதியுடன் பார்த்துக்கொண்டே “என்னையாரும் கல்லால அடிக்கலை நா... நான் தான் அப்படிவேணும்னே பொய் சொன்னேன்...” நடுங்கியகுரலில் அடுத்தடுத்து அவன் கூறிய தகவல்கள்இந்துவிற்குமே பெரும் அதிர்ச்சியை கொடுத்தன.

செமஸ்டர்தேர்வுகளுக்கு தயாராகாதஅம்மாணவன் வரும் வழியில் பைக்கிலிருந்து கீழே விழுந்து தலையில்பட்ட காயத்தை ஆர்ட்ஸ் கல்லூரி மாணவன் தான் தன்னை கல்லால்அடித்தான் என்று நண்பர்களிடம் திருத்தி சொல்லியிருக்கிறான். இதை காரணமாக வைத்துஇரண்டு கல்லூரிகளுக்கிடையே பிரச்சனையை உண்டாக்கினால் தேர்வுகள் ரத்து செய்யப்படும் என்ற எண்ணத்தில்...

t

“உன்னோடசுயநலத்துக்காக மற்ற மாணவர்களையும்வன்முறைக்கு தூண்டி அவங்க எதிர்காலத்தையும்சேர்த்தே ஸ்பாயில் பண்ண நினைச்சுஇருக்க.. இட்ஸ் எ கிரிமினல் ஆக்ட்ஸ்....இதுக்கான தண்டனை என்ன தெரியுமா..? ஏன்? இந்த விஷயம் உனக்காக சண்டைபோட்ட உன் ப்ரிண்ட்ஸ்க்கு தெரிஞ்சாஎன்ன ஆகும் யோசிச்சுபாரு” அவள்கடுமையாக பேசிக் கொண்டிருக்கும் போதே...

வேகமாகஎழுந்து வந்த பிரின்சிபால் அவன்கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுக்க... சப்- இன்ஸ்பெக்டர் துரைராஜ் ஓடிவந்து அவரை தடுத்தார். “உருப்படாமபோகணும்னா நீ மட்டும்எக்கேடாவது கெட்டு போய் தொலைய வேண்டியது தானேடா... ஏன்டா இப்படி காலேஜ் மானத்தையும் சேர்த்து வாங்கிறீங்க” கோபத்தில்கொந்தளித்தவர், இந்துவை பார்த்து... “நான்இப்பவே இவனுக்கு டீ.ஸி குடுத்திடுறேன்மேடம்...! நீங்க ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு போய் விசாரிக்க சொல்லுங்க... அவன் பேரண்ட்ஸ் அங்க வந்து பதில்சொல்லட்டும்...” குறையாத ஆத்திரத்துடன் உறுதியாகசொன்னார்.

அவ்வளவுநேரம் இறுக்கமாக நின்று கொண்டிருந்த அந்த இளைஞன், “அப்படிஎதுவும் பண்ணிடாதிங்க சார்... எங்க அப்பாவுக்கு தெரிஞ்சாஎன்னை கொன்னே போட்ருவார்... இனிமேல் இந்த மாதிரி தப்புஎதுவும் பண்ணவே மாட்டேன்... ஒழுங்கா படிக்கிறேன்... என்னை காலேஜை விட்டு மட்டும் நிறுத்திடாதிங்க சார்...!” கல்லூரி முதல்வரின் கரங்களைபற்றிக் கொண்டு கதறி அழுதான்.

இந்துவின் கண்ணசைவில்துரைராஜ் அம்மாணவனைவெளியே அழைத்து கொண்டு போக...“அவசரப்பட்டு அப்படி எதுவும் பண்ணிடாதிங்க பிரின்சிபால் சார்...! அவன் பியூச்சர் ஸ்பாயில்ஆகிறதோட காலேஜ் நேமும் ஸ்பாயில் ஆகும்.... அவன் செய்த தப்புக்கு தண்டனை வாங்கி குடுக்கிறது ஒன்னும் பெரிய விஷயம் இல்லை...அப்படி செய்தால், மறுபடிதப்பான வழியில தான் யோசிப்பான்... எப். ஐ. ஆர் போடாம ஒன்டே ரிமேண்டில வச்சு அனுப்பசொல்றேன்... நீங்க ஒரு டென் டேஸ்சஸ்பென்ஷன் குடுத்திட்டு திரும்ப சேர்த்துக்கோங்க...” அவரிடம் சமாதானமாக பேசி சம்மதிக்க வைத்தாள்.

“நீங்கசொன்ன மாதிரியே செஞ்சிடுறேன் மேடம்... நீங்க வரலன்னா இந்த பிரச்சனையைஇவ்ளோ சீக்கிரம் சால்வ் பண்ணிருக்க முடியாது... டிப்பார்ட்மெண்ட்ல உங்களுக்கு இருக்கிற இன்ப்ளுயன்ஸ்க்கு யாரவது ரெண்டு இன்ஸ்பெக்டரை அனுப்பிபார்க்க சொல்லிருக்கலாம்... ஸ்டூடண்ட்ஸ் புயூச்சரை மைன்ட்ல வச்சு நீங்களேநேரடியா வந்ததற்கு எப்படிநன்றி சொல்றதுன்னே தெரில...” மனதார நன்றி கூறி விடைகொடுத்தார் கல்லூரிமுதல்வர்.

இரவுபதினோரு மணி, சோடியம் விளக்குகளால்சிதறியிருந்த மஞ்சள் வெளிச்சத்தில் வாகனத்தில் செல்லும் போது வழக்கப்படி சாலைஓரங்களில் போவோர் வருவோரை இந்துவின் கூர்மையான கோல்டன் ஈகிள் கண்கள் கவனித்திருந்தாலும், இன்று உடலும் மனமும் சற்று களைத்தே போயிருந்தது அவளுக்கு... அது வேலைப்பளுவினால் மட்டும்இல்லை என்பது நன்றாகவே புரிந்தது.

அவள்ஐ.பி.எஸ் ட்ரைனிங்முடித்து வேலையில் சேர்ந்ததும். சுய விருப்பு வெறுப்பற்றமனநிலையோடு தான் கடமையை செய்யவேண்டும் என்பது ஜனார்த்தனன் அவளுக்குசொல்லிக் கொடுத்த முதல் பாடம்... இந்துவும் இதுவரை அந்த பாடத்தை கடைப்பிடித்துவந்திருக்கிறாள். ஆனால், இன்று காலையில் சற்று உணர்ச்சிவசப்பட்டுநடந்து கொண்டதாகவே மனம் உணர்த்திக் கொண்டிருந்தது.

ஆட்சியர்அலுவலகத்திலிருந்து வெளியேறிய பிறகு ‘தான் நடந்து கொண்டதுதான் சரி’ என்ற எண்ணத்துடன் வேலையில்ஈடுபட்டு மற்றதை ஒதுக்கித் தள்ளிவிட்டாலும், தற்பொழுது அந்த எண்ணத்தை வீழ்த்துவதுபோல சில விஷயங்கள்மனதை குடைந்து கொண்டிருந்தன. தந்தைக்கு சமமாக மதிப்பவரிடம் அப்படிபேசியது தவறு என்பதே முதன்மையாகஇருந்தாலும், தங்கையின் இழப்பை பற்றி பேசும் போது சூர்யாவின் முகத்தில்தெரிந்த உணர்வும் நாடகத்தனமாகதோன்றவில்லை.

‘ஒருவேளை அவனது வேதனையும், சந்தேகமும் உண்மையாக இருக்கும் பட்சத்தில், அவளுடைய செயல் நியாயமற்றதாக போய்விடுமே.’ தவறாக கணித்து விட்டோமோ? என்ற எண்ணம் துளிர்விட துவங்கியதும், தன்னுடைய அதிகப்படியான பேச்சையும், நடத்தையும் மனதில்ஓட்டிப்பார்த்து திருப்தி அடைய நினைத்தவளுக்குஉறுத்தலே எஞ்சியது. “ப்ச்...! இதென்ன இம்சை ஏன் எனக்கு இப்படியெல்லாம்தோன்றுகிறது.’ அவள் நெற்றியை தேய்த்துவிட்டுக் கொள்வதை பார்த்து காரை ஓரமாக நிறுத்திவிட்டு.. “என்னாச்சுங்கமேடம்?” குடிக்கிறதுக்கு சூடா எதாவது வாங்கிட்டுவரட்டுங்களா? அக்கறையுடன்கேட்டார் டிரைவர் சுப்பையா... “அதெல்லாம்ஒன்னும்மில்ல நீங்க வண்டியை எடுங்க... அதான் வீட்டுக்கு பக்கமா வந்துட்டமே...” வலுக்கட்டாயமாக கருத்தை வெளிப்புறத்தில் செலுத்தி கூறினாள்.

மேலும்பதினைந்து நிமிட பயணத்திற்கு பிறகு அரசுத்துறையில் உயர்பதவியில் இருப்பவர்கள் வசிக்கும் அந்தக் குடியிருப்பு வளாகத்திற்குள் நுழைந்த ஜீப் பெரியக்ரில் கேட் பொருத்தப்பட வீட்டின்முன்னே நின்றது. ஜீப்பிலிருந்து இறங்கியவள், வழக்கம் போல மறுநாள் காலைஒன்பது மணிக்கு சுப்பையாவைவரச்சொல்லி அனுப்புவிட்டு, காவலாளி கேட்டை திறந்துவிட லானை கடந்து வீட்டிற்குப்சென்று அழைப்பு மணியை அழித்துவிட்டு காத்திருந்தாள்.

கதைவைதிறந்த தாய் கஸ்தூரியையைபார்த்து, “ஹாய் மாம்...!”அவள் இதமாக புன்னகைக்க, கோபமாக ஏதோ சொல்ல வாயெடுத்தவர்... கழுத்துப்பகுதியை தடவிக்கொண்டே கதவோரமிருந்த சுவரில் ஒயிலாகசாய்ந்து நின்றிருந்த மகளின் முகத்தில் தெரிந்த களைப்பை கண்ணுற்றதும் அமைதியானார். அதுவரை அவளது தாமதமான வருகையை எண்ணி அங்கலாய்ப்புடன்காத்திருந்ததில் உண்டான சினம் அவரைவிட்டு எங்கோ ஓடிவிட்டிருக்க, தாய்மையில் உள்ளம் கசிந்துருகியது.

இருப்பினும் அதை மகளுக்கு காட்டவிரும்பாதவராக “இதோ உங்க பொண்ணுவந்துட்டா...இப்பவாது சாப்பிட வாங்க” ஹாலில் அமர்ந்திருந்த கணவரை பார்த்து கூறிவிட்டு, ‘என்ன போலீஸ் வேலையோஎன்னவோ சாப்பாடு, தூக்கம் எதை  பற்றியும்கவலை இல்லாம நேரம்கெட்ட நேரத்துல வீட்டுக்கு வரது...’ முணுமுணுப்புடன் சமையலறையை நோக்கி நகர்ந்தார். “டாட்! நீங்க இன்னும் சாப்பிடலையா...?” தும்பைப்பூ நிற ஜிப்பாவில், கம்பீரமானதோற்றத்துடன், அரைவட்ட குஷன் சோஃபாவின் மையத்தில்அமர்ந்திருந்த தந்தையிடம்  கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் பிரவேசித்தவளிடம்...

“உனக்காகதான் வெயிட் பண்ணிட்டு இருந்தேன் மது...! போய் யூனிபோம் சேஞ்பண்ணிட்டு வாடா” பெருமையும், கனிவுமாக கூறினார் ஜனார்த்தனன்...
“டென்மினிட்ஸ்ல வந்திடுறேன் டாட்...” தனது அறையை நோக்கிசென்றவளுக்கு, தந்தை தன்னுடன் எதைபற்றியோ பேசுவதற்காகவே காத்திருக்கிறார் என்பது புரிந்து விட்டது. ‘எதைப்பற்றியோஎன்ன? அந்த சொட்டை போன்பண்ணி காலையில் நடந்த விஷயத்தை எல்லாம் போட்டு கொடுத்திருக்கும்’ எண்ணத்தில்முகம் புன்னகையை பூசிக் கொண்டது. சிறுவயதிலிருந்தே சந்திரனுக்கு இருக்கும் முன் வழுக்கையை ஓயாதுகேலி செய்வதை வழக்கமாக வைத்திருப்பவள்... படித்து பதவியில் அமர்ந்த பிறகு தனது சிறுபிள்ளைதனத்தை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டாலும்... அரிதாக சில நேரங்களில் இப்படி சலுகைஎடுத்துக் கொள்வதும் உண்டு.

சிந்தனையுடனேபெட்ரூம் சைஸில் இருந்த குளியலறைக்குள் நுழைந்து போது அதன் தூய்மைஎன்றைக்கும் போலவே இன்றைக்கும் அவளை வியப்பில்ஆழ்த்தியது. ஒரு வீட்டின் ஆரோக்கியத்திற்குசமையற்கட்டும், பாத்ரூமும் தூய்மையாக பராமரிக்கப் படவேண்டும் என்பதை அடிக்கடி சொல்வதோடு அதை செயலிலும் கடைபிடிப்பவர்அவள் அம்மா கஸ்தூரி... தாயின் நினைவில் முகம் கனிய வாட்ரோபை திறந்துடர்க்கி டவலை எடுத்தவள் பார்வைஜக்கூசிக்கு சென்றது... உடலின் அசதி சிறிது நேரம்அதற்குள் அமிழ்ந்து கிடக்கச் சொல்லி ஆணைபிறப்பிக்க...

தந்தைகாத்திருப்பது நினைவிற்கு வரவும், பிறப்பித்த ஆணைக்கு தற்சமயம் தடா சட்டம் ஒன்றைபோட்டுவிட்டு, அருகிலிருந்த ஷவர் ரூமிற்குள் சென்று... வெதுவெதுப்பான நீரில் உடலை நனைத்து ஐந்தேநிமிடத்தில் திரும்பியவள், பாத்ரோபை சுற்றிக் கொண்டு விரைந்து கீழே சென்றாள்.

தந்தையும் மகளும் உணவு மேஜையில் சென்றுஅமர்ந்ததும், முறுமுறுப்பான மசாலா தோசைகளை சுடச்சுட எடுத்து வந்து கணவருக்கும் மகளுக்கும் கஸ்தூரி அருகிலிருந்து பரிமாற... “வாவ்! எனக்கு பிடித்த மசால் தோசையா...? தேங்க்ஸ் மாம்” தாயை பார்த்து மலர்ச்சியுடன்சொன்னவள்... அவரது முகம்உம்மென்றே இருக்கவும் “மாம்! நான் என்ன டெய்லியாலேட்டா வரேன்... முக்கியமான வேலை இருந்தா மட்டும் லேட்ஆகிடுது... புரிஞ்சிக்கோங்களேன் ப்ளீஸ்...” கண்களை சுருக்கி இறைஞ்சினாள்.

“பத்துமணிஉனக்கு சீக்கிரமா...? அதுவும் இன்னைக்கு ரொம்ப மோசம்... டைம் என்ன பாரு... பனிரெண்டு ஆகிறதுக்குஇன்னும் இருபது நிமிஷம்தான் இருக்கு... டெய்லி இப்படி நகர்வலம் போறது நிறுத்திட்டு கொஞ்சம் சீக்கிரமா தான் வீட்டுக்கு வந்தாளன்ன மது...!”
“சரிமாம்...! இனிமேல் உங்களுக்காக அரைமணிநேரம் முன்னாடி, அதாவது நயன் தர்டிக்கு எல்லாம்வீட்டுக்கு வந்திடுறேன் போதுமா...?” அவள் பெரிய மனதுவைத்து சொல்ல...

கஸ்தூரியும்சற்று மலையிறங்கி மென்முறுவல் பூத்தார். அவருக்கும் பெண்ணுடைய வேலையை குறித்து பெருமை தான் என்றாலும், மகள்கணவன், குழந்தை என்று இல்லற வாழ்க்கையிலும் சோபிக்க வேண்டும் என்ற சராசரி இந்தியதாய்மார்களுக்குறிய அபிலாசையும் இருந்தது. சில நாட்களாகவே பெண்ணிற்கு குடும்பவாழ்க்கை அமையாமல் தள்ளிப்போவதற்கு அவளது பணியை காரணமாக எண்ண ஆரம்பித்தது அவரதுமனம். அதிலிருந்தே அவள் தாமதமாக வீட்டிற்குவரும் சமயங்களில், பணி நிமித்தம்வெளியூருக்கு சென்று வரும் நேரங்களில் தனது பிடித்தமின்மையைவெளிப்படுத்துவார்.“மது! நான் நேத்து சொன்னமாதிரி அடுத்த வாரம் புதன் கிழமை உன்னை ப்ரீ பண்ணி வச்சுக்கோமுடிந்தவரை அன்னைக்கு லீவ் சொல்லிடு... அப்படிஇல்லைனாலும் கொஞ்சம்சீக்கிரம் நாலுமணிக்காவது வீட்டுக்கு வந்துடு” என்ற தாயை புரியாமல்பார்த்தவளிடம்... “அதுக்குள்ளே மறந்துட்டியா?” சலித்தவர், “உன்னைபெண் பார்க்க வராங்கன்னு சொன்னேன் இல்ல...” அதட்டுவது போல் சொன்னார்.“மாம்! நான் தான் உங்களுக்கும் அப்பாவுக்கும்பிடிச்ச மாதிரி மாப்பிள்ளை பாருங்க எனக்கு ஓகேன்னு சொன்னேன் இல்ல... அப்புறம் என்ன? என்னால அலங்காரம் பண்ணிக்கிட்டு கொலு பொம்மை மாதிரியார் முன்னாலையும் வந்து நிக்க முடியாது... அதான் என் போட்டோ குடுக்குறீங்கஇல்ல அது போதும்... என்னோட மத்தகண்டிஷன்ஸ் எல்லாம் நீங்களே பேசிடுங்க...”

அஸ்சுவாரஸ்யாகசொல்லிவிட்டு உணவில் குறியாக இருந்தாள். இந்துவை பொறுத்தவரை வருங்கால கணவன் யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவனாயிருந்தாலும் சரிதான் என்ற அலட்சிய மனப்பான்மைவிபரம் அறிந்த வயதிலிருந்தே அடி உள்ளத்தில் இருந்துவருவது.

“என்னமது! இப்படி சொல்ற...? நாங்க பேசுறது எல்லாம் இருக்கட்டும்... நீ பையனைப் பார்க்கவேண்டாமா? கல்யாணம் செய்துக்க போறவங்க பேசி ஒருத்தரையொருத்தர் புரிஞ்சிக்கிறது தானேநல்லது...” பெற்ற தாயாக எடுத்துச் சொன்னவர்... ‘ஐ. பி. எஸ்பாஸ் பண்ணி இந்தசின்ன வயசுலையே இவ்ளோ பெரிய போஸ்ட்ல இருந்தாலும், பெத்தவங்களை மதிச்சி நடக்கிறதுலையும் என் பொண்ணு தங்கக்கட்டிதான்’ கர்வத்துடன் நினைக்கவும் தவறவில்லை.

“வருஷக்கணக்கா பழகி கல்யாணம் செய்துகிட்டவங்களே ஜஸ்ட் லைக் தட் டிவோர்ஸ் பண்ணிட்டு போற காலம் மாம் இது... இதுல ஒரு நாள்ல அதுவும் ஒருமணி நேரத்துல ஒருத்தரையொருத்தர் புரிஞ்சிக்கிறது எப்படியாம்...?” கேலியாக பதில் கொடுத்தவளின் வாயிற்குள் உருளைக்கிழங்கு மசாலாவுடன் தோசை விள்ளல்கள் அரைபட்டுக் கொண்டிருந்தது.

“சுபகாரியம்பேசும் போது இதென்ன அபசகுனமாடிவோர்ஸ் அது இதுன்னு... உன்னைஇப்படியே விட்டா கல்யாண மேடையில மாப்பிள்ளையை பார்த்துக்கிறேன்னு சொன்னாலும் சொல்லுவ... முதல்ல இப்படி விதண்டாவாதம் பண்றதை நிறுத்திட்டு பொண்ணா லட்சணமா நான் சொல்றதை கேளு...” அன்னையின் வார்த்தைகள் கட்டளையாக வந்தது.

“மாம்! நான் அப்படி சொல்லலை, என்னால இப்போ லீவ் எடுக்க முடியாது... நீங்க பேசுறதை எல்லாம் பேசி முடிச்சிடுங்க... எனக்கு டைம் கிடைக்கும் போது நான் பேசிக்கிறேன்னு தான் சொல்றேன்...” தணிந்த குரலில்  இசைவாகவே கூறியும்...

“அதெல்லாம்சரிவராது, பொண்ணு பார்க்க வரவங்க கிட்ட பொண்ணுன்னு வேற யாரை காட்டசொல்ற...? உனக்கு பிடிக்கலைன்னா பட்டுப்புடைவை மேக் அப் எதுவும்வேண்டாம். கேஷுவல் டிரெஸ்லையே இருந்துக்கோ...” விடாமல் வலியுறுத்திய தாயை சமாளிக்கும் வகையறியாது நீங்களாவது கொஞ்சம்சொல்லுங்களேன் என்பது போல் தந்தையைப் பார்த்தாள்.

“கஸ்தூரி! மது தான்உன் விருப்பப்படியே கல்யாணம் செய்துக்கிறேன்னு சொல்லிட்டா இல்ல... இன்னும் என்னம்மா...? ஊர்ல எல்லாரும் கல்யாணவிஷயத்துல புள்ளைங்க இப்படி சொல்ல மாட்டாங்களான்னு தான் கவலை பட்டுட்டுஇருக்காங்க... நம்ம பொண்ணு அவள்கல்யாண விஷயத்துல நமக்கு முழு உரிமை கொடுத்து இருக்கிறதைநினைச்சு பெருமைப்படு... அவளுக்கு பிடிச்சது என்னன்னு நமக்குதெரியாதா...? மாப்பிள்ளை வீட்ல நாம பேசிக்கலாம்...” சொன்னதற்கு, “அதுக்கில்லங்க” மறுத்துஎதையோ பேச வந்த மனைவியைகண்களால் கட்டுப்படுத்தி அனுப்பியவர்.

“காலேஜ்ஸ்டுடண்ட்ஸ்க்குள்ள இன்னைக்கு என்னடா பிரச்சனை...? மகளிடம் கேட்க... கல்லூரியில்நடந்த பிரச்சனையைப் பற்றி பேசிக் கொண்டே இருவரும் உணவை முடித்தனர்.

சாப்பிட்டதும் தனது அறைக்கு வந்தவள், அந்த முன்னிரவு வேளையில் பால்கனியில் நடைப்பயின்றிருந்தாள். சுற்றுச்சூழல் எங்கும் நிலவிய அடர் மௌனத்தை இதமாக அனுபவித்தவள் உள்ளத்தில் அந்த அமைதி இடம்

பிடிக்காமல்ஆட்டம் காட்டிக்கொண்டிருந்ததென்றால், செல்லும் வழியெங்கும் அனுமதியின்றி அனைவரையும் தீண்டும் ஏகபோக உரிமையை தனக்கே தனக்கென்று பெற்றிருந்த கர்வம் பிடித்த தென்றலோ தேனூரும் அவளது கன்னத்தையே குறிவைத்துமீண்டும் மீண்டும் வந்து முத்தமிட்டுச் சென்ற வண்ணம் இருந்தது. அச்செயலில் வெகுண்டெழுந்து, தென்றலை வாள் யுத்தத்திற்கு அழைத்துசதிராட்டம் போட்ட காதோரகேசத்தை கட்டுப்படுத்தும் செயலிற்கு ஊடே மனசாட்சியுடன் நடந்தபட்டி மன்றமும் தொடர்ந்தது.

‘அவன்மேல் உள்ள வெறுப்பில் என்னிடம்ஒப்படைக்கப்பட வேலையை எதனால்? தட்டிக்கழிக்க நினைக்கிறேன். என்ன பயம் எனக்கு? அவனால்என்ன செய்து விட முடியும்?’ கடுமையானசோதனைகளையும், பயிற்சிகளையும் செய்த போது இல்லாத புதுவிதமான தயக்கம் தற்பொழுதுமனதை நெருடுவதர்க்கான காரணத்தை யூகிக்க முடியாமல் அவளது எண்ணங்கள் அலைபாய்ந்தன. எந்த ஒரு சிக்கலானபிரச்சனைக்கும் சட்டென்று தீர்வை கண்டு விடுபவளுக்கு இவ்வகை குழப்பம் சற்றும் பழக்கமற்றது தான்.

‘அவளுடையசெயலுக்கான சமாதனத்தை அவளாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லையே. தந்தை கேட்டால், என்ன விளக்கம் கொடுப்பது’ என்றசிறு சஞ்சலம் வேறு அவளுக்குள் ஓடிக்கொண்டிருக்க...

“இன்னும்தூங்கலையாடா?” என்று கேட்டுக்கொண்டே ஜனாவும் அங்கே வந்தார். ‘நோ டாட்! வெயிட்டிங்பார் யூ…!” அவரது வருகைக்காக காத்திருப்பதை தெரிவிக்க… “ம்ம் நைஸ் வெதர்” சொல்லிக்கொண்டே நாற்காலியில் அமர்ந்தவரின் காதோரமிருந்த ஒன்றிரண்டு நரைமுடிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை சற்று அதிர்ச்சியுடன் கவனித்த அவரது மகள், தந்தையின் உருவத்தில் வேறுவகையில் மூப்பு தெரிகிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து இல்லை என்று உறுதி செய்த பிறகே திருப்தி அடைந்தாள்.

மகளின்பார்வையை வைத்தே அவளது எண்ணங்கள் செல்லும் திசையறிந்து, தனக்குள் புன்னகைத்தபடி “மது சாதாரணமானவர்களுக்கும், சாதனையாளர்களுக்கும் வித்தியாசம்என்ன தெரியுமா? புதிராக பேசத்துவங்கியவரை அவள் அமைதியாக பார்த்திருக்க…“தன்னை பற்றிய நம்பிக்கையை தனக்குள்ள விதைக்கிறவன் சாமான்யன்… அதே நம்பிக்கையை மத்தவங்களுக்குள்ளவிதைக்கிறவன் சாதனையாளன். அப்படி மத்தவங்க நம்ம மேல வைக்கிறநம்பிக்கையை காலுக்கடியிலபோட்டு நசுக்கிறது புத்திசாலித்தனம்னு நினைக்கிறியா? தந்தை சொல்லவருவதை மூளை அனுமானித்து விட்டாலும்எதுவாக இருந்தாலும்அவரிடமிருந்தே வரட்டும் என்றுமௌனத்தை தொடர்ந்தாள் அவள்..

"வாழ்க்கையிலமனிதர்களை பற்றிய கண்ணோட்டம் மாறக்கூடியது மது…! நாம செய்கிற செயல்களும்அப்படித்தான் சரியா? தவறான்னு? நமக்கு அப்போ தெரியாது. அந்தந்த சூழ்நிலையிலநமக்கு சரின்னு தோன்ற விஷயத்தை தான் நாம பெரும்பாலும்செய்றோம்… நமக்கு சரின்னு தோன்றது பலரோட பார்வைக்கு தவறா கூட தெரியலாம்.” இடைவெளிவிட்டு தொடர்ந்தார். “உன்னைபொருத்தவரைக்கும் உன்னோட அப்பாவுக்கு யாரும் ஈடு இணையில்லைன்னு நீநினைக்கலாம் தப்பில்லை… அதே நேரம் என்னுடையைஇடத்தை யாரும் தட்டிப்பறிக்கல… அதையும் நீ புரிஞ்சிக்கணும்… கடந்த இருபத்தைந்துவருஷமா அரசாங்க வேலையை முழு திருப்தியோட செய்துமுடிச்சிருக்கேன். இது நான் ஓய்வெடுக்கவேண்டிய நேரம்… வண்டி நல்லா ஓடுதேங்கிரதுக்காக நாம அதிகமா சுமைஏத்த முடியுமா? ஒருகட்டத்துக்கு மேல அதை பழுதுபடாமபாத்துக்கிறது தான் நல்லது… அப்போதான் இன்னும் கொஞ்ச நாள் நமக்கு உபயோகமா இருக்கும்… மனுஷங்க உடம்பும் அப்படித்தான்”

“டாட்…” இந்த பேச்சு ரசிக்கவில்லை என்பது போல அதிருப்தியுடன் வெளிப்பட்டதுஇந்துவின் குரல்.

“நெருப்புன்னாசுட்டுடாது மதும்மா! அதுக்காக நான் முதுமையை வரவேற்கிறேன்னுஅர்த்தம் கிடையாது... ஐ டோன்ட் திங்ஏஜிங் மே பி ராங்... இட்ஸ் எ பார்ட் ஆப்லைப்...! டைம் டு போக்கஸ்ஆன் மை பாமிலி. முப்பதுவருஷமா என்னோட வாழ்க்கையின் சுகதுக்கங்களை பகிர்ந்துகிட்ட உன் அம்மா இருக்கா... இனிமேலாவது அவளுக்கே அவளுக்கான நேரத்தை நான் ஒதுக்கணும்... உனக்கும்ஒரு நல்ல லைப் பாட்னரைதேடிக் கொடுக்கணும்... எங்களுக்கு அந்த வேலையை வைக்கமாட்டேன்னு ரொம்ப நம்பியிருந்தேன்....நீ தான் என்னைஏமாத்திட்ட...” சிரித்துக்கொண்டே சொன்ன தந்தையை பொய்யான முறைப்புடன் பார்த்த இந்துவின் முகத்தில் சற்று முன் இருந்த குழப்பம்மறைந்து புன்னகையே பரவி இருந்தது.

“சரிஅதை விடு... சந்திரன், போன் பண்ணி இன்னைக்குமோர்னிங் நடந்ததெல்லாத்தையும் சொன்னான். அந்த ஸ்ரீஷா கேஸ்பற்றி என்ன முடிவு செஞ்சிருக்க...? ஜனா சட்டென்றுஇப்படி கேட்டதும் அவர் மகளுக்கு என்னபதில் சொல்வதென்று புரியவில்லை. சம்மதம் என்று சொல்ல விடாமல் ஏதோ ஒன்று அவளைதடுத்தது.

“நான்கேள்விப்பட்ட வரைக்கும் அந்த சூர்யப்பிரக்காஷ் பற்றிதப்பா எனக்கு எதுவும் தோணலைடா...! அதுவும் இல்லாம நீ இந்த கேஸ்எடுத்துக்கலைன்னா உனக்கும், சூர்யாவுக்கும் ஒத்துப்போகலைன்னுகண்ணு, காது, மூக்கு எல்லாம் வைத்து டிப்பார்ட்மென்ட் முழுக்க பேசுவாங்க... எனக்கு அதில் விருப்பம் இல்லை மது...! இந்துமதி சுப்பீரியர்ஸை மதிக்காம நடந்துக்கிட்டாங்கிற விஷயம் பரவி அதுவே உன்னோடசர்வீஸ்ல ஒரு கரும்புள்ளியாமாறிட்டா? அதை என்னாலசகிச்சிக்க முடியும்னு நினைக்கிறியா...? உன் படிப்பு வேலைன்னு, இதுவரைக்கும் எல்லா விஷயத்துலையுமே எங்களை பெருமைப்பட தான்வச்சிருக்க... இனிமேலும் அப்படித்தான் இருப்பேன்னு நம்புறேன். யோசிச்சு சொல்லு...” தீர்க்கமாக மொழிந்ததோடு அவர் எழப்போக...

தந்தையின் கரத்தை பற்றி தடுத்தாள் இந்து, காவல்துறையில் நடக்கும் அரசியல் நெளிவு, சுளிவுகளை பற்றி நன்கு அறிந்தவள் தான். அவளது வளர்ச்சி பராமரிப்பின்றி தன்போக்கில் வளரும் காட்டு மூங்கிலைப் போல் இல்லாமல். நாள்குறித்து, நீர்வார்த்து பார்த்துப்பார்த்து பராமரிக்கப்பட்ட வீட்டு மூங்கிலே என்றாலும், இளம் சாதனையாளர்கள் பட்டியலில் இடம்பெற அவள் பட்ட இன்னல்கள் எண்ணிலடங்காதவை.

அவளது பணியிலிருக்கும்அபாயங்களையும், ஆபத்துக்களையும் துச்சமாக எண்ணும்துணிவும், துடிப்பும் அவளுக்குள் நிரம்பி தளும்பிக் கொண்டிருந்தாலும், செய்யும் தொழிலை சுவாசிக்கும் காற்றை போல நேசிப்பவளுக்கு தன்னைஈன்றவரின் கருத்திலிருக்கும்உண்மையும் விளங்கியதில் அவளது வேகம் குறைந்து அங்கே விவேகம் குடிகொண்டது.“ஓகேடாட்! அந்த கேஸை நானேஎடுத்துக்கிறதா முடிவு பண்ணிட்டேன்...” சில நொடிகளுக்குப் பிறகுநிதானத்துடன் வந்த பதிலில் திருப்தியுடன்புன்னகைத்தவர்...“தட்ஸ் மை கேர்ள்...!” பெருமிதம்பொங்கும் தோணியில் பெண்ணின் தோளில்தட்டிக் கொடுத்துவிட்டு, மனநிறைவுடன் உறங்கச் சென்றார்.

## குறள் 391

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.**

இது அனைவருக்கும் தெரியும். இதில் என்ன சிறப்பு என்றால் குறளில் ஒரு துணை கால் கூட கிடையாது. ஏன் என்றால் கசடற கற்றால் யார் துணையும் இல்லாமல் சொந்த காலில் நிற்க முடியும் என்பது தான்.

Best wishes from...

Culture & Cuisine
An Authentic Experience

**Home Style South Indian Catering,Training and Events**

**Revathy Sukumaran**
**+1(720)362-0873**
**revathys@cultureandcuisinellc.com**
**www.cultureandcuisinellc.com**

**Follow us on**

**@cultureandcuisinellc**